சட்டமேதை பாபாசாகேப் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 68 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டம், திரு. வி.க.நகர் வடக்கு பகுதி சார்பில் 74 வது வட்டம் ஏகாங்கிபுரத்தில் உள்ள அண்ணல் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு பகுதி செயலாளர் செ. தமிழ்வேந்தன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் –அமைச்சர் பி.கே.சேகர்பாபு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், தாயகம்கவி எம்.எல்.ஏ, ஆர்.ராஜன், வட்ட கழக செயலாளர்கள் எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், மா.ருத்ரமூர்த்தி, எம்.இசட்.அபோய், பரிமளா சுரேஷ்பாபு, பகுதி அமைப்பாளர் சே.மணிமாறன், ஜோஸ்வா, நிறைமொழி, குப்புசாமி, சென்பகவள்ளி, ஜெயலட்சுமி,சாந்தி, தமிழ்செல்வி, ரவி, சி.ஆனந்த், டி.வினோத், ராமமூர்த்தி,குகன், மால்கம், நந்தகுமார் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில்

143 பயனாளிகளுக்கு ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர், டிச.07

திருவள்ளூர் தனியார் மகாலில் நடைபெற்ற அரசு விழாவில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்களை சேர்ந்த 143 பயனாளிகளுக்கு ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் வழங்கினார்.

அப்போது ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.19,00,000 மதிப்பீட்டில் இலவச வீட்டுமனை பட்டாக்கான ஆணைகளையும், 20 பயனாளிகளுக்கு ரூ.133800 மதிப்பீட்டில் இலவச தையல் இயந்திரமும், 10 பயனாளிகளுக்கு ரூ.72800 மதிப்பீட்டில் இலவச சலவை பெட்டியும், பழங்குடியினர் நலத்துறை சார்பில் நன்னிலம் மகளிர் நில உடைமை திட்டத்தில் 3 பயனாளிகளுக்கு ரூ.15,00,000 மதிப்பீட்டில் வங்கிக் கடன் உதவிகளும், முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் சமூக பொருளாதார தொழில் முனைவு திட்டத்தின் கீழ் 7 பயனாளிகளுக்கு ரூ.18,46,472 மதிப்பீட்டில் வங்கிக் கடன் உதவிகளும், பிரதான் மந்திரி அனுசூசி த்ஜாதி அபியுதாப் யோஜ்னா திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு ரூ.1,80,000 மதிப்பீட்டில் கடனுதவிகளும்,

தமிழ்நாடு தூய்மை பணியாளராக பணிபுரிவோர் 3 நலவாரிய உறுப்பினர்களுக்கு ரூ.27,50000 மதிப்பீட்டின் நலத்திட்ட உதவிகளும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.12,67,920 மதிப்பீட்டில் வீட்டுமனை பட்டாக்கான ஆணைகளையும், 5 பயனாளிகளுக்கு சான்றி தழ்களும், மகளிர் திட்டம் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.8,90,000 மதிப்பீட்டில் வங்கிக் கடன் உதவிகளும், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளும், 5 பயனாளிகளுக்கு ரூ.3,60,000 மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்பு கடனுதவியும், 5 பயனாளிகளுக்கு ரூ.2,39,760 மதிப்பீட்டில் பயிர் கடனும், வேளாண்மை துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.1,63,713 மதிப்பீட்டில் நுண்ணீர் பாசன நலத்திட்டமும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் மானாவாரி நில மேம்பாட்டு திட்டம் ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டத்தில் 05பயனாளிகளுக்கு ரூ.20,82,800 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளும், வேளாண் மற்றும் பொறியியல் துறை சார்பில் வேளாண்மை இயந்திரமயமாக்கும் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.18,33,904 மதிப்பீட்டில் பவர் டில்லரும், மாவட்ட தொழில் மையம் சார்பில் அண்ணன் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு ரூ.12,00000 மதிப்பீட்டில் தொழில் முனைவோருக்கான வங்கிக் கடன் உதவிகளும், மதுவிலக்கு மற்றும் ஆயுத்தீர்வு துறை சார்பில் மனம் திருந்தி வாழும் மதுவிலக்கு 2 குற்றவாளிகளுக்கு ரூ.1,00,000 மறுவாழ்வு நிதியும், முன்னோடி வங்கி சார்பில்10 பயனாளிகளுக்கு ரூ.10,00,000 மதிப்பீட்டில் கறவை மாடு கடன் உதவியும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.65,520 மதிப்பீட்டில் இலவச சலவை பெட்டியும் ஆக மொத்தம் 143 பயனாளிகளுக்கு ரூ. 1,87,90,889 மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

தொடர்ந்து தூய்மை பணியாளர்களுக்கு அமைச்சர் உணவுகள் பரிமாறி அவர்களுடன் அமர்ந்து உணவருந்தினர்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.இராஜேந்திரன் ஆ.கிருஷ்ணசாமி டி.ஜே.கோவிந்தராஜன் துரை சந்திரசேகர் ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், மாநகராட்சி ஆணையர் ச.கந்தசாமி, திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர் இராஜ்குமார், திருவள்ளூர் நகர் மன்ற தலைவர் உதயமலர், மாவட்ட ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல அலுவலர் செல்வராணி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி. தனலட்சுமி, தனித் துணை ஆட்சியர் கணேசன், நகர் மன்ற துணைத் தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், மாநில மாவட்ட நிர்வாகிகள் பி.ஜெ.மூர்த்தி, சி.ஜெரால்டு, ஆர்.டி.இ.ஆதிசேசன், கே.திராவிட பக்தன், ஒன்றிய நகர செயலாளர்கள் என்.இ.கே.மூர்த்தி, ப.ச.கமலேஷ், எஸ்.மகாலிங்கம், கே.அரிகிருஷ்னன், மோ.ரமேஷ், மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதாப்பேட்டை சட்டமன்றதொகுதியில் நவம்பர் 27 உதயநிதியின் உதயநாளை முன்னிட்டு 2000 முதியோர்களுக்கு சைதாப்பேட்டை வி.ஜி.பி. சாலையில் உள்ள அன்னை வேளாங்கன்னி கலைக்கல்லூரியில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நலஉதவிகள் வழங்கினார். இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி., பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., தா.மோகன்குமார் எம்.சி., பகுதி கழக நிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வட்டசெயலாளர்கள் எஸ்.பி.கோதண்டம், அட்கோகமலநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

நொளம்பூர் வே.ராஜன் தலைமை! தமிழன் பிரசன்னா – இ.நேரு பங்கேற்பு!

மதுரவாயல் 143வது வட்டத்தில் துணை முதல்வர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் மா.சுப்பிரமணியன் – காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, டிச.7-

சென்னை தெற்கு மாவட்டம், மதாவாயல் வடக்குப் பகுதி 143வது வட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதயநாள் விழா பொதுக்கூட்டம் இன்று (07.12.2024 - சனிக் கிழமை) மாலை 6.00 மணிக்கு, 4வது பிளாக் சிவ சக்தி அம்மன் கோயில் அருகில் முகப்பேர் மேற்கு நொளம்பூரில் நடைபெறுகின்றது. கூட்டத்திற்கு பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் தலைமை வகிக்கிறார். ச.சசிகுமார் வரவேற்புரையாற்றுகிறார்.

ச.சசிக்குமார், எஸ்.ரகுபதி, ஜி.மூர்த்தி, என்.ஆர். மணிவண்ணன், பி.உமாபதி, எஸ்.தினேஷ், கே.ஆறுமுகம், இ.சாரங்கபாணி, பி.சரவணன், டி.நாகரத்தினம், ஜெ.குமார், ஜே.ஜானகி ராமன், பி.டி.ராமசந்திரன், பி.தங்கவேலு, எம்.ராஜாமணி, எஸ்.ராஜேந்திரன், வெ.ஆனந்தன், ஏ.பிரகாஷ், கே.பாஸ்டின், எம்.வைரம், பி.ஏழுமலை, கேகன்னியப்பன் ஆகியோர் வரவேற்புப் பேசுகின்றனர்.

இக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் தமிழன் பிரசன்னா, இ.நேரு ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்து உரை நிகழ்த்துகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., பி.டி.பாண்டிச்செல்வம், அ.ம.துரை, வீரமணி, கே.குமரேசன், ஆர்.கர்ணல், எம்.ஏ.செந்தில் சுரேஷ், ஆ.மாலினி,

தீ.பாலாஜி, எம்.உதயகுமார், வட்டச் செயலாளர்கள் எஸ்.ஜி.மாதவன், எம்.கே..பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், எம்.இ.ஸ்டாலின், ப.ஆலன், எம்.ரூபன், ரமணி மாதவன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ப.தாட்சாயணி நன்றி கூறுகிறார்.

சைதை ஆர்.ரமேஷ் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை!

துணை முதல்வர் பிறந்தநாள்: மாபெரும் மருத்துவ முகாம்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

தமிழச்சி தங்கபாண்டியன் – மு.மகேஷ்குமார் – பரிதிஇளம்சுருதி பங்கேற்பு!

சென்னை, டிச.07

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு பகுதி துணைச்செயலாளர் ஆர்.ரமேஷ் தலைமையிலும், பகுதி கழக செயலாளரும் பத்தாவது மண்டல குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, பொதுக் குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., முன்னிலையில் பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன், வட்டகழக செயலாளர்கள் எம்.நாகா, எஸ்.பி.கோதண்டம், சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோகமலநாதன், மாவட்ட பிரதிநிதிகள் பால்கார்ரவி, கிண்டி செல்வம், பொன்ஜெய்சிங், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கே.பிரபு, பிரஸ் கார்த்திக், திடீர்நகர்தாஸ், கேபிள்காளி, வட்டகழக நிர்வாககிள் கேபிள் எம்.முருகன், கே.கசாலி, இரா.வெங்கடேசன், ஆர்.தனா, பி.டி.சி.குமார், எம்.மாதவன், கேபிள்தனசேகரன் ஆகியோர் வரவேற்பில் 08.12.2024 (ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணி முதல் நண்பகல் 2 மணி வரை சைதாப்பேட்டை, கோதா மேடு அம்பேத்கார் திடலில் கற்பகவிநாயகா கல்லூரி மருத்துவமனை நடத்தும் மாபெரும் மருத்துவமுகாமினை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கி வைக்கிறார்.

இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், துணைமேயர் மு.மகேஷ்குமார், தொகுதி பொறுப்பாளர் பரிதிஇளம்சுருதி, மாவட்ட அமைப்பாளர்கள் சைதைசாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், ந.மணிகண்டன், எம்.எஸ்.ஹரிபாபு, அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன் மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், ஆர்.ரவி, ஜி.பாபு, டி.என்.சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம்பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, 142 வது வட்டகழக நிர்வாகிகள் ஆர்பர்முனுசாமி, எப்.சாகுல்அமீது, எம்.கதிர், ஆர்.கோபி, கே.முருகேசன், வி.பி.காந்தி, ஆர்.மோகன், கே.விஜய், உள்ளிட்ட அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், கோதா மேடு, திடீர்நகர் கழக முன்னோடிகள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

துணை முதல்வர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு – சின்னமாத்தூர் வி.மணிகண்டன் ஏற்பாட்டில்

சென்னை வடகிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் மாபெரும் குருதிக்கொடை முகாம்!

மாதவரம் எஸ்.சுதர்சனம் – சி.எச்.சேகர் – புழல் எம்.நாராயணன் – எஸ்.ஏ. சீனிவாசன் பங்கேற்பு!

சென்னை, டிச.07-

தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில், துணை ஒருங்கிணைப்பாளர் சின்னமாத்தூர் வி.மணிகண்டன் ஏற்பாட்டில் மாத்தூர் எம்.எம்.டி.ஏ. 2வது பிரதான சாலையில் அமைந்துள்ள சுவாதி மஹாலில் (எ.சி.) மாபெரும் குருதிக் கொடை வழங்கும் விழா இன்று (07122024 சனிக்கிழமை) காலை 09.00 க்கு தொடங்கி மதியம் 2.00 மணி வரை நடைபெறவிருக்கிறது.

மாநில தகவல் தொழிநுட்ப அணி செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்கு விப்பு மற்றும் வணிகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நல்வாழ்த்துகளுடன் நடைபெறும், இந்த நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம், மாநில துணை செயலாளர், சென்னை மண்டல பொறுப்பாளர் கும்மிடிப்பூண்டி சி. எச்.சேகர், மாதவரம் வடக்கு பகுதி கழக செயலாளர் புழல் எம்.நாராயணன்,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் எஸ்.ஏ.சீனிவாசன், 19வது வார்டு மாமன்ற உறுப்பினர் க.காசிநாதன், 19வது வட்ட கழக செயலாளர் க.தாமரைச்செல்வன் எம்.சி., வி.கார்த்திகேயன், பு.நிர்ம ல்குமார், ஜிம் ராஜா ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் தகவல் தொழிநுட்ப அணி நிர்வாகிகள் : சு.நரேந்திரன், பி.கோபிநாத், வி.சிவரஞ்சனி, ச.ஹரிஷ் எம்.எஸ்.டி.சுரேந்தர், எஸ்.ராஜேஷ், அ.புவனேஷ், ஆர்.விஸ்வநாதன், மா.வினோத்குமார், தி.நாகலட்சுமி, ரவிராகவேந்தர், ஆ.சுப்பிரமணி, எம்.பிரபாகரன், ஜி.சரத்குமார், எஸ்.விவேகானந்தன், ஆர்.சுபாஷ், ஓ.பாலாஜி, டி.தினேஷ், ஜெ.திவாகர், கே.ஜனனி, எஸ்.கதிரவன், எ.வி.ஆறுமுகம், சி.நோபினால், எல்.விக்னேஷ், ச.வருண்குமார், ம.சுந்தர், சி.லிங்கேஸ்வரன்.

19வது வட்ட நிர்வாகிகள் கோ.சரவணன், ந.ரகுவரன், பா.துளசி ஆ.திருமலை, க.சங்கர் வி.ஹரி சுப்பிரமணி, து.கோவர்தன், வே. கண்ணியப்பராஜ், ஏ.கதிரவன், ஆர்.சையத் அப்சல்,

மாவட்ட மற்றும் பகுதி அணிகளின் அமைப்பாளர் மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, எஸ்.உதயகுமார், கே.ஏழுமலை, பி.துரைசாமி, கா.சேரலாதன், கே.துரைதசரதன், பி.ஜெயராஜ், பேன்சி பா.ரமேஷ், எம்.புகழேந்தி, த.விக்னேஷ்வரன், அ.சசிதரன், என்.பிரபு, வி.புண்ணியகோட்டி, பேன்சி பா.ரமேஷ், டி.விக்னேஷ் எஸ்.தமிழ்செல்வி, காஞ்சனா மோகன்,

முன்னாள் நிர்வாகிகள் மற்றும் மூத்த முன்னோடிகள் கே.கௌரி கோதண்டபாணி, ஆர்.ராஜகோபால், இரா.குகன், எம்.தட்சிணாமூர்த்தி, அ.கணேசன், பரிமளா நாகராஜன், சி.ஜானகிராமன், அ.ரவிக்குமார், சி.ராஜா, கே.குமார், கே.விஜயகுமார், பில்டர் கே.துரை, எஸ்.ராஜேந்திரன், கே.மெஹபூப் அலி, ஏ.ஜெயச்சந்திரன், கே.கங்காதரன், கே7 சங்கர், என்.சேகர், எஸ்.வெங்கடேசன், பி.சந்திரன், எஸ்.வேடியப்பன், வி.பூபாலன், வி.சுரேஷ்குமார், வி.சரவணன், டி.சுமன், ஜி.வி.அசோக், வி.ராம்குமார், ஜி.ராஜேஷ் கண்ணா, எம்.ஹரிபிரசாத்.

உதயநிதி ஸ்டாலின் ரசிகர் மன்ற நிர்வாகிகள் : சின்னமாத்தூர் எஸ்.செந்தில், எஸ்.விக்னேஷ் எஸ்.டி.ஆர் ஏ.விஜயராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

எஸ்.வி.மணிகண்டன் ஏற்பாட்டில் – மயிலை மேற்கு பகுதி

விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் அறுசுவை உணவு! நல உதவிகள்!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, டிச. 7-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் துணை முதல்வர் இளம் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு 500 நபர்களுக்கு பிரியாணி மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு நல திட்ட உதவிகள் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு வழங்குகிறார்.

பகுதி செயலாளர்கள் நந்தனம் கி.மதி, எஸ்.முரளி, சி.ஐ.டி. நகர் ஆர்.குமரன், வட்ட செயலாளர் மூ.இராஜேந்திரன் பங்கேற்கின்றனர்.

துணை முதல்வர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மயிலை மேற்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் நாளை (08.12.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணியளவில் சென்மேரிஸ் பாலம் மந்தவெளி ரயில்வே ஸ்டேஷன் அருகில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு அவர்கள் 500 நபர்களுக்கு பிரியாணி மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மயிலை பகுதி செயலாளர்கள் நந்தனம் கி.மதி எம்.சி., எஸ்.முரளி சி.ஐ.டி. நகர் ஆர்.குமரன் மூ.இராஜேந்திரன் அகல்யா விஸ்வநாதன் பகுதி துணை செயலாளர் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் மா.சுதாகர், ஏ.சிறை செல்வன், ஆ.ரவி பகுதி அமைப்பாளர் மோ.தனசேகர் பகுதி துணை அமைப்பாளர்கள் மற்றும் 123 அ வட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடு : பகுதி துணை அமைப்பாளர் எஸ்.வி.மணிகண்டன்

காஞ்சிபுரம் தனியார் திருமண மஹாலில் நேற்று (06.12.2024) நடைபெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 592 பயனாளிகளுக்கு ரூ.444.85 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் ஆகியோர் வழங்கினார்கள். உடன் காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி. எம்.மகாலட்சுமி யுவராஜ், காஞ்சிபுரம் மாநகராட்சி துணை மேயர் குமரகுருநாதன், காஞ்சிபுரம் ஒன்றிய குழுத்தலைவர் திருமதி.மலர்க்கொடி குமார் ஆகியோர் உள்ளனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு திருமுல்லைவாயிலில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலைக்கு திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மலர் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினர். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார் மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் பகுதி கழகச் செயலாளர்கள் பேபிசேகர், ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், மாமன்ற உறுப்பினர்கள் வட்ட கழக செயலாளர்கள் உள்ளனர்.